# 28. DEVOLUTION OF POWERS

## 28.5 மாநில திட்டக்குழுவின் இரண்டாவது அறிக்கை–சமூகநலத்துறை பற்றிய பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள்

சமூகநலம் (ம) சத்துணவு திட்டத்துறை

செயலாளர் (நிலை) எண் 2 நாள் : 05.01.1998

படிக்க :

1. தலைமை செயலாளரின் நேர்முக கடித எண்.14/சி/எஸ்.எப்.சி./94 நாள்.13.11.95
2. மாநில நிதிக்குழு தலைவரின் நேர்முக கடிதஎண்.14/சி/எஸ்எப்சி/94–18/ நாள்.24.11.95, 13.12.95 மற்றும் 07.05.96
3. மாநில திட்டக்குழு உறுப்பினர், செயலாளர் நேர்முக கடித எண்.897/எஸ்எப்.சி.எல்/யூ/97/ நாள்.01.04.97.

**ஆணை**

இந்திய அரசியலமைப்பின் 73–வது திருத்தச் சட்டத்திற்கு இணங்க உருவாக்கப்பட்ட மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளான ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு தேர்தல்கள் நடைபெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பதவியேற்றுள்ளனர். மேற்கூறிய சட்டத்தின் பிரிவுக்கூறு 243–ஜி– மற்றும் 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 257–க்கு இணங்க பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதிக்கான திட்டங்களை தீட்டி செயல்படுத்தவும் மற்றும் 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பட்டியல் 1–ல் உள்ள இனங்களை செயல்படுத்தவும், தேவையான பொறுப்புக்களை மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். ஆகவே, எந்தெந்த பொறுப்புகளை ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கலாம் என்பது குறித்து மாநில திட்டக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறே மாநில திட்டக்குழு தனது இரண்டாவது அறிக்கையில் பிறவற்றோடு சமூகநலத்துறை தொடர்பான இனங்கள் மீது அரசுக்கு அறிக்கையை அனுப்பி உள்ளது.

1. மாநில திட்டக்குழு பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களில் செயலாக்கம், மேற்பார்வை, ஆய்வு ஆகியவை தொடர்பான அதிகாரங்களை உள்ளாட்சி நிறுவனங்களுக்கு ஒப்படைப்பதற்கான அறிக்கையை அரசுக்கு அனுப்பியது. அதை அரசு கவனமாக ஆராய்ந்தது. அதில் சமூகநலத் துறை சம்பந்தப்பட்ட திட்ட பணிகளில் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒப்படைக்க வேண்டிய பணிகள் எவை எவை என்பது குறித்து பிற்சேர்க்கையில் குறிப்பிடப்படுள்ள பொறுப்புக்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க ஆணையிடப்படுகிறது.

2. இது குறித்து சம்பந்தப்பட்ட துறைத்தலைவர்கள் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**லக்ஷ்மி ப்ரானேஷ்**
அரசு செயலாளர்

## 28. DEVOLUTION OF POWERS

திட்டப்பணிகளை செயல்படுத்துதல் மேற்பார்வை செய்தல் மற்றும் ஆய்வு ஆகியவை தொடர்பான அதிகாரங்களை ஒப்படைத்தல்–சமூகநலம் (மகளிர் மற்றும் குழந்தைகள் நலம்)

| தொடர் எண் | திட்டங்கள்/ திட்டப்பணிகள் | ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | மாவட்ட ஊராட்சிகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 01. | சத்துணவு மையங்களை ஏற்படுத்தி நிர்வகித்து மேற்பார்வையிடல் (மாநில திட்டம்) | பார்வையிடல் | பார்வையிடல் | மறு ஆய்வு |
| 02. | ஒருங்கிணைந்த குழந்தைகள் நல மேம்பாட்டு திட்டம் / துணை ஊட்டச் சத்து திட்டம் (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்) | பார்வையிடல் | பார்வையிடுதல் | மறு ஆய்வு |
| 03. | பள்ளிகள் ஒருங்கிணைந்த குழந்தை நல மேம்பாட்டு திட்டமையங்கள் முதலியவற்றில் சத்துணவு திட்டத்தை செயல்படுத்துதல் (மாநில திட்டம் / மத்திய பொறுப்பேற்கும் திட்டம் / வெளிநாட்டு உதவி பெறும் திட்டம்) | பார்வையிடல் | பார்வையிடல் | மறு ஆய்வு |
| 04. | பால்வாடிகள் மற்றும் பாலர் பள்ளிகள் தொடங்குதல் | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |
| 05. | ஸ்வீடன் நாட்டு உதவியுடன் ஒருங்கிணைந்த குழந்தை நல திட்ட தொகுப்புகளில் குழந்தை நல மையங்கள் கட்டுதல் (வெளி நாட்டு உதவி பெறும் திட்டம்) | உதவியளித்தல் | உதவியளித்தல் | –– |
| 06. | ஊட்டச்சத்து திட்டத்தை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் | உதவியளித்தல் | உதவியளித்தல் | –– |
| 07. | சிசுக் கொலையை ஒழிக்கும் திட்டம் மற்றும் கைவிடப்பட்ட பெண் குழந்தைகளை பாதுகாத்து வளர்த்தல் (மாநில திட்டம்) | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |
| 08. | மகளிருக்கான பணி நிலையங்களையும், உற்பத்தி பிரிவுகளையும் மேற்பார்வையிடல் (மாநில திட்டம்) | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |

## 28. DEVOLUTION OF POWERS

| தொடர் எண் | திட்டங்கள்/ திட்டப்பணிகள் | ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | மாவட்ட ஊராட்சிகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 09. | உழைக்கும் மகளிர் இல்லங்களை மேற்பார்வையிடல் (மாநில திட்டம்) | -- | -- | பார்வையிடல் |
| 10. | வாழ்க்கை தொழில் பயிற்சி, ஏழை விதவை தாயின் குழந்தைகள், ஏழை விதவையின் மகளின் திருமணத்திற்கு உதவி, அனாதை பெண்கள் ஆகியோருக்கு உதவியளித்தல் போன்ற பல்வேறு மகளிர் நல திட்டங்களை மேற்பார்வை செய்தல் (மாநில திட்டம்) | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |
| 11. | மகளிர் மன்றம் மற்றும் அதன் பொருளாதார நடவடிக்கைகள் குறித்த திட்டம் (மாநில திட்டம்) | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |
| 12. | பணிக்கு செல்லும் மற்றும் உடல் நலம் இல்லாத பெண்களின் குழந்தைகளுக்கான காப்பகங்களை மேற்பார்வையிடல் (மாநில திட்டம் / மத்திய பொறுப்பேற்கும் திட்டம்) | பார்வையிடல் | பார்வையிடல் | மறு ஆய்வு |
| 13. | மகளிருக்கான வழிகாட்டி அமைப்புகள் (மாநில திட்டம்) | -- | -- | -- |
| 14. | மாவட்டங்களில் உள்ள மகளிருக்கான தொண்டு இல்லங்களை மேற்பார்வையிடல் (மாநில திட்டம்) | -- | -- | மறு ஆய்வு |
| 15. | மகளிருக்கான அனைத்து நல திட்டங்கள் | உதவியளித்தல் | பார்வையிடல் | மறு ஆய்வு |
| 16. | மகளிர் தொழில் கூட்டுறவு சங்கங்களை மேற்பார்வையிடல் (மாநிலத் திட்டம்) | -- | பார்வையிடல் | மறு ஆய்வு |
| 17. | அனாதை இல்லங்களின் செயற்பாட்டை மேற்பார்வையிடல் (மாநிலத் திட்டம்) | -- | பார்வையிடல் | மறு ஆய்வு |
| 18. | வறுமைக்கோட்டிற்கு கீழேயுள்ள கருவுற்ற தாய்மார்களுக்கு நிதியுதவி (மாநிலத் திட்டம்) | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |

| தொடர் எண் | திட்டங்கள்/ திட்டப்பணிகள் | ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | மாவட்ட ஊராட்சிகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 19. | வறுமை கோட்டிற்குக் கீழேயுள்ள பெண்களின் திருமணத்திற்கான நிதியுதவி (மாநிலத் திட்டம்) உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு | |
| 20. | பெண் குழந்தை நலத் திட்டத்திற்கான நிதியுதவி (மாநில திட்டம்) | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |
| 21. | ஆதரவற்ற கைம் பெண்கள் / கைவிடப்பட்ட மகளிருக்கு தையல் இயந்திரம் வழங்குதல் (மாநில திட்டம்) | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |
| 22. | ஏழை கைம்பெண்களின் மகளுக்கு திருமண முன்பணம் (மாநில திட்டம்) | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |
| 23. | ஐ.எப்.ஏ.டி. திட்டத்தின் (IFAD) கீழ் மகளிர் மேம்பாட்டு திட்டம் (வெளி நாட்டு உதவி பெறும் திட்டம்) | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |
| 24. | முதியோர் இல்லங்களின் செயல்பாடு குறித்த திட்டம். | -- | பார்வையிடுதல் | மறு ஆய்வு |

**லக்ஷ்மி ப்ரானேஷ்**
அரசு செயலாளர்

## 28. DEVOLUTION OF POWERS

திட்டப்பணிகளைச் செயல்படுத்துதல் மேற்பார்வை செய்தல் மற்றும் ஆய்வு ஆகியவை தொடர்பான அதிகாரங்களை ஒப்படைத்தல் (ஊனமுற்றோர் நல திட்டம் / சமூக பாதுகாப்பு)

| தொடர் எண் | திட்டங்கள்/ திட்டப்பணிகள் | ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | மாவட்ட ஊராட்சிகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 01. | பார்வையற்றோருக்கான / ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு இல்லங்களில் செயல்பாட்டை மேற்பார்வையிடல் | உதவியளித்தல் | பார்வையிடல் | மறுஆய்வு |
| 02. | உடல் ஊனமுற்றோருக்காக நடத்தப்படும் பள்ளிகள் / விடுதிகள் ஆகியவற்றை மேற்பார்வையிடல் | உதவியளித்தல் | பார்வையிடல் | மறுஆய்வு |
| 03. | ஊனமுற்ற பள்ளி மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை | உதவியளித்தல் | பார்வையிடல் | மறுஆய்வு |
| 04. | கல்வி நிலையங்கள், அரசுத்துறைகளில் உடல் ஊனமுற்றோருக்கு இட ஒதுக்கீடு செயல்படுத்துவதை மேற்பார்வையிடல். | -- | -- | மறுஆய்வு |
| 05. | ஒருங்கிணைந்த இளம்பிள்ளை வாத ஒழிப்பு திட்டத்திற்கு நிதியுதவி | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |
| 06. | உடல் ஊனமுற்ற / மன நலங்குன்றிய குழந்தைகளின் மறு வாழ்வுக்காக அரசு சாராத அமைப்புகளுக்கு உதவி | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |
| 07. | உடல் ஊனமுற்றோர்க்கான (பார்வையின்படி) காது கேளாமை, வாய் பேசாமை புதிய பள்ளிகள் தொடங்குதல் | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |
| 08. | வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்த பார்வையற்ற வேலையில்லாதோருக்கு வேலை வாய்ப்பினை வழங்கல் (மாநில திட்டம்) | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |
| 09. | பார்வையற்ற மாணவர்களுக்கு எழுத்தர் உதவி (மாநில திட்டம்) | -- | -- | மறு ஆய்வு |
| 10. | உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு படிப்புதவி தொகை (மாநில திட்டம்) | உதவியளித்தல் | உதவியளித்தல் | மறு ஆய்வு |

| தொடர் எண் | திட்டங்கள்/ திட்டப்பணிகள் | ஊராட்சிகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | மாவட்ட ஊராட்சிகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 11. | தொழிற் பயிற்சி பள்ளிகளில் சீர் திருத்தப் பள்ளிகளிலிருந்து விடுபட்ட மாணவர்களுக்கு, பயிற்சி அளிப்பதற்கான உதவி | –– | –– | மறு ஆய்வு |
| 12. | சமுதாயத்திற்கு தீங்கு பயக்கும் இளங் குற்றவாளிகளைத் தடுத்து கட்டுப்படுத்தி நன்னெறிப்படுத்தும் திட்டங்கள் | –– | –– | மறு ஆய்வு |
| 13. | சீர்திருத்த இல்லங்கள், விழிப்பு பணி நிறுவனங்கள், சிறுவர் சீர்திருத்தப் பள்ளிகள் ஆகியவற்றின் செயல்பாடுகள். | –– | பார்வையிடல் | மறு ஆய்வு |

**லக்ஷ்மி ப்ரானேஷ்**
அரசு செயலாளர்